1992 பிப்ரவரி 7]

முற்பகல் 10-55

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1991-92-ம் ஆண்டிற்கான குழுவின் இருபத்தைந்தாவது, இருபத்தாறாவது இருபத்தேழாவது மற்றும் இருபத்தெட்டாவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் 1991-92-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எ. ஏகாம்பர ரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991-92-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை குழுவின் சார்பில் இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அறிவிப்பு

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவுகள் அறிமுகம் செய்தல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.